*அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல:17/2008*

*எனது இல: EST 5/4/1/13(VII)*
*அரசாங்க நிர்வாக,*
*உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 07.*

*2008.08.22*

*அமைச்சுக்களின் செயலாளர்கள்*
*மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,*
*மற்றும் திணைக்களத் தலைவர்கள்*

***<u>அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு I மற்றும் அதிஉயர் வகுப்பின் சம்பள முரண்பாடுகளை அகற்றுதல்</u>***

*2004.01.01 ஆந் திகதியில் இருந்து அரச முகாமை உதவியாளர் சேவை தாபிக்கப்பட்டதன் பின், அதில் வகுப்பு I ற்கும், அதிஉயர் வகுப்பிற்கும் பதவி உயர்வு பெறுகின்ற அலுவலர்கள் பெறப்படுகின்ற சம்பளத்தை பார்க்க ஒப்பீட்டு ரீதியில் குறைந்த சம்பளம், அத்திகதிக்கு முன் தொடர்புடைய சேவைகளில் (பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, சிறாப்பர் சேவை மற்றும் பண்டகசாலை காப்பாளர் சேவை) வகுப்பு I ற்கும் அதிஉயர் வகுப்பிற்கும் உயர்வு பெற்ற சில அலுவலர்களுக்கு கிடைப்பதால் ஏற்பட்டுள்ள முரண்பாட்டினை நீக்கும் பொருட்டு தேசிய சம்பள பதவியணிக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் பின்வருமாறு செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*02.*

*(I) சம்பள முரண்பாடுகளை அகற்றும் செயற்பாட்டை பொறுத்தவரையில் மட்டும் அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட சேவைகளில் வகுப்பு II "அ" வில் இருந்து வகுப்பு I ற்கு 2003.12.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதவி உயர்வு பெற்றவர்களும் அது காரணமாக சம்பள முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளவர்களுமான அலுவலர்கள் 2004.01.01 ஆம் திகதி வரைக்கும் உரிய சேவையின் வகுப்பு II "அ" வில் இருந்ததாக உத்தேசித்து 2004.01.01 ஆம் திகதிக்கு பின்னராக அமைகின்ற தற்போதைக்கு பெற்றுள்ள பதவி உயர்வுக்கு கிட்டிய சம்பள ஏற்றத் திகதியில் பதவி உயர்வு பெறப்பட்டதாக உத்தேச முறையில் கருதி சம்பளத்தை மாற்றியமைத்தல்.*

*(II) அதேபோன்று உரிய சேவையின் வகுப்பு I இல் இருந்து அதிஉயர் தரத்திற்கு 2003.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் உயர்வு பெற்றுள்ள, அத்துடன் அதே காரணமாக சம்பள முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள அலுவலர்கள் 2004.01.01 ஆம் திகதி வரைக்கும் வகுப்பு I இல் இருந்ததாக உத்தேச முறையில் கருதி 2004.01.01 ஆம் திகதிக்கு பின்னராக அமைகின்ற, தற்போதைக்கு பெறப்பட்டுள்ள உயர்வுக்கு கிட்டிய சம்பள ஏற்றத் திகதியில் உயர்வு பெற்றதாக உத்தேச முறையில் கருதி சம்பளத்தை மாற்றியமைத்தல்.*

*உதாரணம்: பொது எழுதுநர் சேவையின் வகுப்பு II "அ" வில் இருந்து பொ.எ.சே. வகுப்பு I க்கு 2001.06.01 ஆம் திகதியன்று உயர்வு பெற்ற அலுவலர் ஒருவர் 2004.06.01 ஆம் திகதி உயர்வு பெற்றதாக உத்தேசிக்கப்பட வேண்டியதுடன், அதன்படி சம்பளத்தை மாற்றியமைக்க வேண்டும். (இதன்படி ஜுலை மாதம் 22 ஆம் திகதிக்கு சம்பள ஏற்றம் அமைந்திருந்த 2001.06.01 ஆம் திகதி பொ.எ.சே. II "அ"வைச் சேர்ந்த அலுவலர் ஒருவரின் சம்பளத்தை மாற்றியமைக்க வேண்டிய விதம் காட்டப்படுகின்ற மாதிரியொன்று இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.)*

*03.* தற்போது உயர்வு கிடைத்துள்ள திகதியில் இருந்து, மேற்போந்த 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு உயர்வு பெற்றதாக உத்தேசிக்கப்படும் திகதி வரையிலான சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெறுவதற்காக வேண்டிய எல்லாத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், அப்போதைக்கு நடைமுறையில் இருந்த ஏற்பாடுகளின் கீழ் சம்பள ஏற்றங்களை உத்தேச அடிப்படையில் வழங்க வேண்டும்.அவரின் பதவியுயர்விற்கு முன்னைய தரத்தின் சம்பள உயர்வுப் பெறுமதி இந்நோக்கத்திற்காகப் பிரயோகிக்கப்படல் வேண்டும். அவ்வாறு கணிப்பீடு செய்து உத்தேச முறையில் உயர்வு பெற்றதாக கருதப்படும் திகதியில் இருந்து தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5ஆம் பிரிவின் கீழ் உத்தேச அடிப்படையில் சம்பளங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியதுடன், அதன்பின் உழைத்துப் பெற்றுள்ள சம்பள ஏற்றங்களும் உத்தேச அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டும். அக்காலத்திற்குள் வேறு நியமனம்/பதவி உயர்வு பெறப்பட்டிருந்தால் அந் நியமனம்/பதவி உயர்வின் கீழ் சம்பளங்களை மாற்றியமைப்பதற்காகவும் உத்தேச அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட சம்பளப்படி நிலைகளை பயன்படுத்த வேண்டும்.

*04.* <u>இச் சுற்றறிக்கையின் கீழ் சம்பளங்களை மாற்றியமைத்தல், தொடர்புடைய சேவைகளிலிருந்து 2004.01.01 ஆம் திகதி அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் தொடர்பில் மட்டும் வரையறுக்கப்படுகிறது.</u> அதே போன்று 2004.01.01 ஆம் திகதி அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு, சேவையாற்றிக்கொண்டிருந்து அதன் பின் ஓய்வு பெற்றுள்ள அலுவலர்களின் ஓய்வுச் சம்பளங்களும் இதன் படி திருத்தப்பட வேண்டும். இச் சம்பளத் திருத்தம் காரணமாக 2008.08.31 ஆம் திகதி வரை நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் 2008.09.01 ஆம் திகதியில் இருந்து திருத்திய சம்பளங்களும் திருத்திய ஓய்வுச் சம்பளங்களும் செலுத்தப்பட வேண்டும்.

*05.* மேற்போந்த ஏற்பாடுகளின்படி, சம்பளங்களை திருத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேசத் திகதிவரை மட்டும், தொடர்புடைய அலுவலர்கள் குறைந்த தரப் பதவியில் இருந்ததாக கருதப்பட்டாலும் அலுவலர் ஒருவரின் சேவைமூப்புக்கு அதன்மூலம் பாதிப்பு எதுவும் ஏற்படாததுடன் சம்பளத் திருத்தம் தவிர்ந்த மற்றைய எல்லா விடயங்கள் தொடர்பாகவும் அலுவலரின் பதவிஉயர்வு நிரந்தரமாக நடைமுறையான திகதியே ஏற்புடையதாதல் வேண்டும்.

*06.* இந்தச் சுற்றறிக்கை தேசிய சம்பள பதவியணிக் குழு மற்றும் பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/ டி,திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

**இணைப்பு I**

| ஜுலை 22 ஆந் திகதிக்கு சம்பள ஏற்றம் அமைகின்ற பொ.எ.சே.வகுப்பு II "அ" வைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் உயர்வு பெற்றிராதிருந்தால் சம்பளங்களை மாற்றியமைத்தல் | | 2001.06.01 ஆந் திகதி வகுப்பு I க்கு உயர்வு பெற்றதன் பேரில் சம்பளங்களை மாற்றியமைத்தல் | | 2004.06.01 ஆந் திகதி உத்தேச அடிப்படையின் பேரில் உயர்வு பெறாதிருந்தால் சம்பளத்தை மாற்றியமைத்தல் | |
|---|---|---|---|---|---|
| 2000.07.22 | ரூ. 69480/- | 2001.06.01 | ரூ. 71040/- | 2004.05.31 | ரூ. 99840/- |
| 2001.07.22 | ரூ. 71040/- | 2002.06.01 | ரூ. 72600/- | 2004.06.01 | ரூ. 104040/- |
| 2002.07.22 | ரூ. 72600/- | 2003.06.01 | ரூ. 74160/- | 2004.12.01 | ரூ. 134040/- |
| 2003.07.22 | ரூ. 74160/- | 2004.01.01 | ரூ. 91980/- | 2005.06.01 | ரூ. 137520/- |
| 2004.01.01 | ரூ. 99840/- | 2004.06.01 | ரூ. 93540/- | 2006.01.01 | ரூ. 16448/- |
| 2004.07.22 | ரூ.101400/- | 2004.12.01 | ரூ. 123540/- | 2006.06.01 | ரூ. 16738/- |
| 2004.12.01 | ரூ.131400/- | 2005.06.01 | ரூ. 125100/- | 2007.01.01 | ரூ. 19380/- |
| 2005.07.22 | ரூ.133620/- | 2006.01.01 | ரூ. 15153.75 | | |
| 2006.01.01 | ரூ. 15509.25 | 2006.06.01 | ரூ. 15443.75 | | |
| 2006.07.22 | ரூ. 15719.25 | 2007.01.01 | ரூ. 17930/- | | |
| 2007.01.01 | ரூ. 17780/- | | | | |